## கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2018 மே மாதம் 30–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை..** **திருமதி சா.லெட்சுமி, M.Com.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

**கூட்ட பொருள்கள்**

| |
|---|
| **பொருள் எண்–01** |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10ல் உள்ள கிராம புல எண் 230/1, 231/7பி பகுதி–ல் அமைந்துள்ள அனுமதியற்ற ஸ்ரீமகாலட்சுமி நகர் மனைப்பிரிவில் உள்ள 24 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ. இ(வி.ம) எண் 305/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் அ1/2721/2017 |
| **பொருள் எண்–02** |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10ல் உள்ள கிராம புல எண் 213/10, 213/11 பகுதி, 213/5–ல் அமைந்துள்ள அனுமதியற்ற விநாயகா நகர் மனைப்பிரிவில் உள்ள 25 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ. இ(வி.ம) எண் 309/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் அ1/2721/2017 |
| பொருள் எண்–03 |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14ல் உள்ள ஏமப்பேர் கிராம புல எண் 310/2சி பகுதி–ல் அமைந்துள்ள அனுமதியற்ற ஷீரடி சாய்பாபா மனைப்பிரிவில் உள்ள 13 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ. இ(வி.ம) எண் 352/2018 (R) என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் அ1/2721/2017 |
| பொருள் எண்–04 |
| இந்நகராட்சியின் 2017–2018ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2018–2019ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் |
| **பொருள் எண் – 05** |
| கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 07, கச்சேரி சாலையில் அமைந்துள்ள மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில், பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக வாகனங்கள் நிறுத்துமிடம் ஒன்று அமைத்து அதனை பொது ஏலத்தில் விட்டு, நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் மேற்கொள்ள, நகராட்சி ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் கச்சேரி சாலை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதியதாக இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு நிழற்கூடம் (Shed) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) –க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் /2018/இ1

**பொருள் எண் – 06**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான துருகம் சாலையில் அமைந்துள்ள உரத்திடலில் உள்ள குப்பைகளை ஒரு சில சமூக விரோதிகளால் அடிக்கடி தீயினை பற்ற வைத்து விடுவதாலும், தற்போதுள்ள கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால், அடிக்கடி தீப்பற்றி எரிகிறது. அதுசமயம் தீயணைப்பு துறையின் மூலம் அடிக்கடி தீயினை அணைத்து வரப்பட்டது. இருப்பினும், தீயணைப்பு துறையினருக்கு இருக்கும் அவசர, அத்யாவசிய பணிகளுக்கு மத்தியில் குப்பை கிடங்கில் பற்றி எரியும் தீயினையும் அணைத்து வருகின்றனர். நகராட்சியின் மூலம் புதியதாக மின் மோட்டாருடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தி, அடிக்கடி பற்றி எரியும் தீயினை அணைக்க ஏதுவாக குழாய் மூலம் தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,50,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் /2018/இ1

**பொருள் எண் – 07**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15, ஏமப்பேர் ஏரிக்கரையில் நகராட்சியின் மூலம் அமைக்கப்பட்ட திறந்தவெளி கிணற்றில் மேல்புறத்தில் மூடி இல்லாததால் ஏதேனும் அசம்பாவிதங்கள் நிகழா வண்ணம் அந்த திறந்தவெளி கிணற்றின் மேல்புறத்தில் இரும்பிலான மூடி அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி திறந்தவெளி கிணற்றில் மூடி அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3,00,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் /2018/இ1

**பொருள் எண் – 08**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 ஏமப்பேர் குளத்து மேட்டு தெருவில், நகராட்சியின் மூலம் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சமுதாய கழிவறைக்கு, தண்ணீர் வசதிகள் இல்லாததால், மேற்படி கழிவறையினை பராமரிக்க இயலாமல் உள்ளது. எனவே, மேற்கண்ட கழிவறைக்கு தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,50,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் / 2018/இ1

**பொருள் எண் – 09**

அரசாணை (நிலை) எண் 97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.072007ல் தெரிவித்துள்ளவாறு, கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதில் உள்ள நடைமுறைகளை எளிதாக்கும் வகையில், கட்டண விதிகளுக்குட்பட்டு குடிநீர் குழாய் இணைப்பு எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடுமின்றி, புதிய குடிநீர் இணைப்பு கோரி வரப்பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் காலதாமதமின்றி இணைப்புகள் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் 21.03.2018 அன்று நடத்தப்பட்ட ஆய்வு கூட்ட நடவடிக்கையில் நகராட்சியின் மூலம் சொத்துவரி விதிக்கப்பட்ட அனைத்து குடியிருப்புதாரர்களுக்கும் குடிநீர் இணைப்புகள் 100 சதவீதம் வழங்கிட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி அதற்குண்டான திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்பிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதிகளில் உள்ள மொத்த சொத்து வரி விதிப்பு எண்ணிக்கையில் ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய்களை தவிர்த்து மீதமுள்ள வரி விதிப்புதாரர்களுக்கு புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்கிடவும், அதற்கான நகராட்சி சாலையினை துண்டித்து புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கிடவும், பழுதடைந்த சாலைகளை உடன் செப்பனிட வேண்டியும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.800.00 இலட்சத்திற்கான திட்ட கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கான செலவினத்திற்கான தொகையினை அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் பணியின் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 777/2018/இ1

**பொருள் எண் – 10**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள கணினி பிரிவில் உள்ள AC பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரிசெய்ய இந்நகராட்சி மன்ற தீர்மான எண் 248 /2018 நாள் 28.04.2018 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | RI Cool World Attur | 9950 |
| 2. | Express Refrigeration Attur | 10650 |
| 3. | Arul Radio Centre Attur | 10350 |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **RI Cool World Attur ஆத்தூர்** என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் சி1 /707/2018

**பொருள் எண் –11**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தமிழக அரசு ஓராண்டு சாதனைமலர் வெளியிட இந்நகராட்சியில் ஒரு ஆண்டில் செய்யப்பட்ட திட்டப்பணிகள் குறித்து விளம்பம் செய்ய மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொர்பு துறை விழுப்புரம் அவர்களின் கடித எண் 22/செம.தொ / 2018 நாள் 03.02.2018ன்படி தமிழக அரசு ஓராண்டு நிறைவேற்றப்பட்ட வளர்ச்சிகளின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை அந்தந்த துறைகளின் வழியே விளம்பரம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி திட்டப் பணிகள் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வழங்க கோரி வரப்பெற்ற கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தினமுரசு | 3300057738/22.02.18 | 14700 |
| 2. | தினகரன் | 3300057763/ 22.02.18 | 18060 |
| 3. | தினமலர் | RRA0033/ 02.03.18 | 16800 |
| 4 | தினத்தந்தி | DC 17-18 0008975 / 02.03.18 | 22260 |
| | | | |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற பட்டியல் தொகயினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 424/2018/இ1

**பொருள் எண்–12**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் நிதி 2018–2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 27.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப் பம்புகள், விசைப் பம்புகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் (கைப்பம்புகள்) பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,95,000/– | திரு M.மோகன் கள்ளக்குறிச்சி | 0.32% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு A.சின்னதுரை கள்ளக்குறிச்சி | 3.88% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், 0.32% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள “திரு M.மோகன், கள்ளக்குறிச்சி “ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை குடிநீர் பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 658/2018/இ1

**பொருள் எண்–13**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் நிதி 2018–2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 27.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப் பம்புகள், விசைப் பம்புகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் (கைப்பம்புகள்) பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,95,000/– | திரு A.சின்னதுரை கள்ளக்குறிச்சி | 0.27% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு M.மோகன் கள்ளக்குறிச்சி | 3.88% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், 0.27% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள “திரு A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி “ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை குடிநீர் பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 658/2018/இ1

**பொருள் எண்–14**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய்நிதி 2018–2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 04.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடங்களில் சிறிய அளவிலான நுண்உரக்களம் அமைத்தல் | ரூ. 4,50,000/– | திரு N.கணேசன் கள்ளக்குறிச்சி | 0.01% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s.ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 3.50% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், 0.01% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள “திரு N.கணேசன், கள்ளக்குறிச்சி “ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை திடக் கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 774/2018/இ1

**பொருள் எண்–15**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் நிதி 2018–2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 15.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்திற்கு திரவ பிளிச்சிங் (Bleaching Liquid) விநியோகம் செய்தல் | ரூ. 4,00,000/– | திரு T.M.இளங்கோ கள்ளக்குறிச்சி | 2.63% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s P.N.R. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ். கள்ளக்குறிச்சி | 5.26% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், 2.63% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள “திரு T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி “ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2624/2017/இ1

**பொருள் எண்–16**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-2017ன் கீழ், கீழ்க்காணும் பணிகளுக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 29660/P3/2016 நாள். 30.11.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், வேலூர்-12 அவர்களின் செயல்முறை ந.க.எண். 5821/2017/E3 நாள். 22.12.2017-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, அதற்கிணங்க கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 08.02.2018 ஆம் தேதியன்று மின்னனு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வி.ஜ.பி. கார்டன் பூங்கா இடத்தில் நுண்ணுயிரி உரம் தயாரிப்பதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல் (வார்டு எண். 01) | ரூ. 40.00 | **திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி** | **+4.95 % மதிப்பீட்டிற்கும் அதிகம்** |
| | | | திரு. K.மணி, கள்ளக்குறிச்சி | +11.25 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | டி.எம்.எஸ். நகர் பூங்கா இடத்தில் நுண்ணுயிரி உரம் தயாரிப்பதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல் (வார்டு எண். 21) | ரூ. 40.00 | **திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி** | **+4.95 % மதிப்பீட்டிற்கும் அதிகம்** |
| | | | திரு. K.மணி, கள்ளக்குறிச்சி | +11.25 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | துருகம் பிரதான சாலை மயானத்தில் நுண்ணுயிரி உரம் தயாரிப்பதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல் (வார்டு எண். 10) | ரூ. 40.00 | **திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி** | **+4.95 % மதிப்பீட்டிற்கும் அதிகம்** |
| | | | திரு. K.மணி, கள்ளக்குறிச்சி | +11.25 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்காணும் மூன்று பணிகளுக்கும், மதிப்பீட்டைவிட கூடுதலான விலை விகிதத்தில் இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மேலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மூன்று பணிகளுக்கும் குறைவான ஒப்பந்தப்புள்ளி + 4.95% மதிப்பீட்டைவிட கூடுதலாக அளித்துள்ள **"திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதால், L1 ஒப்பந்ததாரராக கருதி, விலைக்குறைப்பு செய்துதர 12.02.2018 அன்று கோரியதில், 13.02.2018 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமான பொருட்களின் கடும் விலையேற்றத்தின் காரணமாகவும், மணல் குவாரிகள் செயல்படாததால் ஏற்பட்டுள்ள மணல் தட்டுப்பாட்டின் காரணமாகவும், பணிபுரியும் வேலையாட்களின் சம்பள உயர்வின் காரணமாகவும், **+4.95%**-லிருந்து அனைத்து இனங்களுக்கும் **+4.50%**-க்கு குறைத்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். இதற்கு குறைவாக குறைத்துதர இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி **+4.50%**-க்கு மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) அளித்துள்ள, **"திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. **"திருவாளர்கள். ஸ்ரீ வேலா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) விலை விகிதம் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.50%** என்ற விலைவிகிதத்தினை திட்டப்பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

4. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1762 / 2016 / அ4)**

**பொருள் எண்–17**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் (Swachh Bharat Mission) கீழ், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-2017ன் கீழ், நுண்உரக்களம் அமைப்பதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 29660/P3/2016 நாள். 30.11.2017ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு அதனடிப்படையில் கீழ்க்காணும் 3 இடங்களில் நுண்உரக்களம் அமைப்பதற்கு, உத்தேசிக்கப்பட்டு 08.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி உத்தரவு 15.02.2018ல் வழங்கப்பட்டது.

மேற்படி 3 எண்ணிக்கை பணிகள் அமைப்பதற்கு இடத்தினை அளவீடு மேற்கொண்டு, தூண்கள் நிறுத்துவதற்கு பணிகள் மேற்கொள்ளும் போது, கீழ்க்காணும் 2 எண்ணிக்கை பணிகளுக்கு அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் குடியிருப்புதாரர்களால் பெருத்த ஆட்சேபனை தெரிவித்து அப்பகுதியில் நுண்உரக்களம் கட்டக்கூடாது என ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இம்மூன்று பணிகளையும் எடுத்துள்ள ஒப்பந்ததாரர் மேற்படி ஆட்சேபனை உள்ள 2 இடங்களிலும் பணியினை மேற்கொள்ள இடத்தினை அளவீடு செய்து கொடுத்தால்தான், மூன்று பணிகளையும் ஒரே நேரத்தில் தொடங்கி விரைவில் நுண்உரக்களம் அமைக்க இயலும் என 03.04.2018 தேதியில் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும், நகராட்சி ஆணையர் அவர்களின் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் 09.03.2018, 16.03.2018 & 26.03.2018 ஆகிய மூன்று தேதிகளில் சமாதான கூட்டம் நடத்தப்பட்டும், பொதுமக்கள் தொடர்ந்து ஆட்சேபனை தெரிவித்து, சமாதான கூட்டம் நடத்தவிடாமல் கூட்டத்தினை புறக்கணித்தனர்.

இந்நிலையில், 04.04.2018 அன்று மண்டல செயற்பொறியாளர், வேலூர் அவர்களால் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில், மேற்படி இரண்டு இடங்களிலும் நுண்உரக்களம் நகராட்சி மூலம் அமையப்பட்டால் நாங்கள் பலகட்ட போராட்டங்கள் முன்னெடுத்து நடத்துவோம் எனவும், தீக்குளிக்க கூட தயங்கமாட்டோம் எனவும் தெரிவித்து ஆட்சேபனை தெரிவித்து வந்தார்கள். மேற்படி நுண் உரக்களம் அமைக்கும் பணி அரசின் சிறப்பு திட்டப்பணி என்பதாலும், பொதுமக்களாகிய தங்களுக்காகவே இந்த சிறப்புத் திட்டத்தினை செயல்படுத்தப்படவுள்ளதாலும், பொதுமக்கள் இதற்கு தகுந்த ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமாறு மண்டல செயற்பொறியாளர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் அவ்விடத்தில் நுண்உரக்களம் அமைப்பதற்கு தொடர்ந்து ஆட்சேபனை தெரிவித்து வருகின்றனர்.

மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களால் 12.04.2018 அன்று மேற்படி இடத்தினை நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், இப்பணி அரசின் சிறப்பு திட்டப்பணி என்பதால், ஆட்சேபனை உள்ள இடத்திற்கு பதிலாக மாற்று இடம் காலதாமதமின்றி உடனடியாக தேர்வு செய்யப்பட்டு பணியினை உடன் தொடங்க அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் கீழ்க்காணும் இடங்களில் நுண்உரக்களம் அமைப்பதற்கு இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏற்கனவே கட்டுவதற்கு நகர் மன்ற ஒப்புதல் பெறப்பட்ட பகுதி | தற்போது மாற்றி கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்ட பகுதி |
|---|---|---|
| 1. | வி.ஜ.பி. கார்டன் பூங்கா இடத்தில் நுண்ணுயிரி உரம் தயாரிப்பதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல் | துருகம் சாலை மயானம் (அலகு-2) |
| 2. | டி.எம்.எஸ். நகர் பூங்கா இடத்தில் நுண்ணுயிரி உரம் தயாரிப்பதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல் | நகராட்சி அலுவலக வளாகம் |

எனவே, மேற்படி ஆட்சேபனை உள்ள பகுதிகளில் நுண்உரக்களம் அமைக்க இயலாததால், அதற்கு பதிலாக மாற்று இடத்தில் நுண்உரக்களம் கட்டுவதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. திட்டப் பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு, தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.
3. மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பிடவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1762 / 2016 / அ4)**

**பொருள் எண்–18**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், திறந்தவெளியில் மலம் கழிப்பதை அகற்றுதல் திட்டத்தின் கீழ், அரசாணை (நிலை) எண். 105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 21.07.2015ல் சமுதாய கழிவறைகள் கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகர் மன்ற தீர்மானம் எண். 1140/2015 நாள். 30.09.2015ல் மொத்தம் 13 இடங்களில் சமுதாய கழிவறைகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதனடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டிற்கு 7 சமுதாய கழிவறைகள் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2016-2017 ஆம் ஆண்டிற்கு 3

எண்ணிக்கையிலான சமுதாய கழிவறைகள் கட்டுவதற்கு, கீழ்காணும் பணிகள் தெரிவு செய்யப்பட்டு, 02.08.2016ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 29.08.2016-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | க.மாமனந்தல் சாலை-2ல் சமுதாய பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 9.00 |
| 2. | சிறுவங்கூர் சாலை-2ல் சமுதாய பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 9.00 |
| 3. | கருணாபுரம் பகுதி-2ல் சமுதாய பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 9.00 |

மேற்படி இடத்தில் பணியினை மேற்கொள்ளப்படும் போது அவ்விடத்தில் கழிவறைகள் கட்டக்கூடாது என அப்பகுதி பொதுமக்களால் பெருத்த ஆட்சேபனை தெரிவித்து சமுதாய கழிவறைகள் கட்ட முடியாத நிலையில் உள்ளது. மேலும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பிற பகுதிகளில் திறந்தவெளியில் மலம் கழிக்குமிடத்திடத்தினை கண்டறிந்து அவ்விடத்தில் சமுதாய பொதுக்கழிவறைகள் கட்ட போதுமான இடவசதி உள்ளதா என தலஆய்வு செய்யப்பட்டதில், வார்டு எண். 20, சித்தேரி தெரு முருகன் கோவில் அருகில் திறந்தவெளியில் மலம் கழிக்கப்படுவதை கண்டறியப்பட்டு, அவ்விடத்தில் ஒரு சமுதாய கழிவறையினை கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டது. மீதமுள்ள 2 சமுதாய பொதுக்கழிவறைகள் கட்டுவதற்கு போதுமான இட வசதி இல்லாத நிலையில் உள்ளது.

மேலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், தனி நபர் கழிவறை கட்டும் திட்டத்தில் மொத்தம் 644 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அனைத்து தனிநபர் கழிவறைகளும் முடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தூய்மை இந்தியா திட்டத்தின் பணிகளில், பரப்புரையாளர் மற்றும் மேற்பார்வையாளர்களால் தலஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், சமுதாய கழிவறை கட்ட இயலாத பகுதிகளில் தனி நபர் கழிவறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. ஏற்கனவே க.மாமனந்தல் சாலையில் 1 கழிவறை, சிறுவங்கூர் சாலையில் 3 கழிவறைகள் மற்றும் கருணாபுரம் பகுதியில் 3 கழிவறைகள் கட்டப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

இந்நிலையில் மேற்படி 2016-2017 ஆம் ஆண்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி உத்தரவு வழங்கப்பட்ட 3 எண்ணிக்கையிலான சமுதாய கழிவறை அமைக்கும் பணியில், ஒரு கழிவறையினை மட்டும் இடம் மாற்றம் செய்து கட்டிடவும், மீதமுள்ள 2 கழிவறை கட்டும் பணியினை கீழ்க்காணும் விவரப்படி இரத்து செய்திடவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>இடமாற்றம் செய்யப்படும் கழிவறை விவரம்</u>**

| வ. எண் | ஏற்கனவே கட்டுவதற்கு நகர் மன்ற ஒப்புதல் பெறப்பட்ட பகுதி | தற்போது மாற்றி கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்ட பகுதி |
|---|---|---|
| 1. | க.மாமனந்தல் சாலை-2ல் சமுதாய பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | வார்டு எண். 20, சித்தேரி தெரு முருகன் கோவில் அருகில் |

**<u>இரத்து செய்யப்படும் கழிவறைகள் விவரம்</u>**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிறுவங்கூர் சாலை-2ல் சமுதாய பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 9.00 |
| 2. | கருணாபுரம் பகுதி-2ல் சமுதாய பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 9.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் வார்டுகளில் ஏற்கனவே போதுமான அளவு சமுதாய கழிப்பறைகள் உள்ளதாலும், மேலும் கட்ட இடவசதி இல்லாததாலும், அப்பகுதிகளில் உள்ள வீடுகளில் தனி நபர் கழிவறை கட்டப்பட்டு வருவதாலும், அப்பகுதிகளில் புதியதாக சமுதாய கழிவறைகள் தேவையில்லை என்பதாலும், மேற்காணும் விவரப்படி உள்ள ஒரு சமுதாய கழிவறையினை இடமாற்றம் செய்திடவும், 2 கழிவறை கட்டும் பணிகளை இரத்து செய்திடவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2282 / 2015 / இ1)**

**பொருள் எண்–19**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு **□ய்மை □கிஙியா ஙிட்ட□, ஒரு□□ணைகித ஙிட□க□□ மேலாண்மை ஙிட்ட□ 2016-2017**ன் கீழ், நுண்ணுயிரி உரம் தயாரிப்பதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை மாவட்ட அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் *(District Edition)*-ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்ய கோரப்பட்டதில், 05.01.2018 அன்று மக்கள் குரல் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ. 14,439/-ஐ வழங்கக் கோரி M/s. கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண். 2420 நாள். 05.01.2018ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s. கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1762 / 2016 / அ4**

**பொருள் எண்–20**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுசுகாதாரம் மற்றும் தெருமின் விளக்கு பணிகளுக்கு கீழ்காணும் விபரப்படி உள்ள வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| வ.எண் | வாகன விபரம் | வாகன எண் |
|---|---|---|
| 1 | டிப்பர் லாரி | TN 32 U8542 |
| 2 | டிப்பர் லாரி | TN 32 AV 0552 |
| 3 | டம்பர் பிளேசர் | TN 32 P 3612 |
| 4 | டம்பர் பிளேசர் | TN 32 AV1335 |
| 5 | தெருமின் விளக்கு வாகனம் | TN 15 W0158 |
| 6 | ஜே.சி.பி | TN 32 AV0727 |
| 7 | டாடா ஏசி | TN 15 S 7421 |
| 8 | டாடா ஏசி | TN 15 S 7454 |

மேற்காணும் விபரப்படி உள்ள வாகனங்கள் அனைத்தும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதாரம் மற்றும் தெருமின் விளக்கு பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருவதால் அந்தந்த வாகனங்கள் எங்கு செல்கிறது எவ்வளவு நேரம் பயன்பாட்டில் உள்ளது எவ்வளது தூரம் செல்கிறது என்பதை கண்டறியும் பொருட்டு **GPS ( Global Positioning System )** கருவி பொருத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்கண்ட விவரப்படி உள்ள 8 வாகனங்களுக்கும் **GPS** ற கருவி பொருத்துவதற்கும் அதற்கானும் உத்தேச செலவினம் ரூ.65,000/–( ரூபாய் .அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) –க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படகிறது.

அலுவலக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மூன்று விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கோண்டதையும் அனுமதிக்கலாம்
3. பெறப்படும் பட்டியலின் அடிப்படையில் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந,க,எண் 940 /எச்1/2018

**பொருள் எண்–21**

2016–2017ம் ஆண்டு தணிக்கை ஆய்வு இந்நகராட்சியில் நடைபெற உள்ளதால் தணிக்கை தொடர்பான கணக்கு பணிகளை மேற்கொள்ள 2015–2016ம் ஆண்டுக்கான தணிக்கை கணக்குகளை முடித்து தந்த ஆதவ் சொல்யூஷன், விழுப்புரம் என்றி நிறுவனத்தின் மூலம் 2015–16ம் ஆண்டுக்கான விலை விகிதத்திலேயே (ரூ.35000/–) செய்து கொடுக்க அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற சம்மத கடிதத்தின் பேரில் 2016–17ம் ஆண்டிற்கான தணிக்கை தொடர்பான கணக்கு பணிகளை முடித்து தரவும், அதற்கான செலவினத் தொகை ரூ.35000/–யை (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தணிக்கை தொடர்பான கணக்கு பணியினை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் பி1/2361/2017

**பொருள் எண்–22**

1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவு 124D, துணைப்பிரிவு 13ன்படி தொழில்வரியினை ஐந்து ஆண்டிற்கு ஒருமுறை உயர்வு செய்ய வேண்டும். ஏற்கனவே நகர் மன்றம் தனது தீர்மான எண் 817 நாள் 30.09.2018ல் தொழில் வரியானது 01.10.2018 முதல் 30% கீழ்க்கண்டவாறு உயர்வு செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் (சம்பளம் மற்றும் படிகள் உட்பட) | தற்போது 01.10.2018 முதல் உயர்த்தப்பட உள்ள அரையாண்டு தொழில் வரி |
|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை |
| 2 | 21001 முதல் 30000 வரை | ரூ.166/– |
| 3 | 30001 முதல் 45000 வரை | ரூ.421/– |
| 4 | 45001 முதல் 60000 வரை | ரூ.826/– |
| 5 | 60001 முதல் 75000 வரை | ரூ.1247/– |
| 6 | 75001 முதல் அதற்கு மேல் | ரூ.1250/– |

Collection of Tax on Professions, Traders callings and Employments Rules 1999 விதி 16ன்படி தொழில் வரியானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உயர்த்த உத்தரவிடப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள தொகையில் அவ்வுயர்வானது 25%க்கு குறையாமலும் 35% க்கு மிகாமலும் உயர்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் இருந்து வரப்பட்ட கடித எண் Roc.No. 12503/2018/ஆர் நாள் 21.05.2018 மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. ஏற்கனவே உள்ள தொழில்வரியில் 01.10.2018 முதல் 30% உயர்வு செய்து வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேலும் இது தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், அதற்குண்டான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் 1209/2018/அ1

**பொருள் எண்–23**

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சமுதாய கழிப்பிடங்கள் 23, பொது கழிப்பிடங்கள் 2 எண்ணிக்கையில் செயல்பட்டுவருகிறது. மேலும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் மூலமும், தூய்மை பாரத இந்தியா திட்டத்தின் கீழும் கழிவறை இல்லாத வீடுகளுக்கு விண்ணப்பம் பெறப்பட்டு Onlineல் ஏற்றும்பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த பணி முடிவுறும் வரையில் நகராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடங்களை பராமரிக்க குறிஞ்சி மலர் மகளிர் சுய உதவி குழு மூலம் ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு நபர் ஒன்றுக்கு மாத ஊதியம் ரூ.1000வீதம் வழங்க ஆணையரின் முன் அனுமதி பெறப்பட்டு 01/2018 மாதம் முதல் கழிப்பிடங்களை பராமரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது குறிஞ்சி மலர் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு 01/2018 மாதம் முதல் 05/2018 மாதம் வரையில் நிலுவை ஊதியம் வழங்கிடவும், மேலும் 2018–2019ம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய ஊதியத்தினை வழங்கவும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குழு உறுப்பினர்களுக்கு மாத ஊதியம் வழங்க ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1323/2018/அ4

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**